எண்ணித் துணிந்து இறங்குங்கள் தோழர்காள்!

Phone No 4502 | Regd. No. M. 5458

தனி அரை அணா | இலவம்கை 5 சதம்

பேரா. கு. கோதண்டபாணி
"அறிவாலயம்"
25/8, திருவள்ளுவர் குடியிருப்பு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1 | சென்னை (30—6—50) | வெளியீடு (1—7—50) | இதழ் 292

கொடுமைகளைக் களைந்து கொள்கையினைப் பரப்ப வாரீர்!

நல்லவை நாடி அல்லவை அகற்றுவோம்

அழியட்டும் அநியாய அடக்குமுறை; வளரட்டும் ஜனநாயகம்

..............(:—:)..............

ஆரணி மாநாட்டில் பொதுச் செயலாளர் சொற்பொழிவு

"தி. மு. கழகத்தில் சேரும் தோழர்கள் சேருவதற்கு முன்னே நன்றாக சிந்தித்து சிறந்ததோர் முடிவிற்கு வந்த பின்னரே சேர வேண்டும். ஏனென்றால் இந்த இயக்கத்தின் மூலம் சட்டசபை உறுப்பினராகவோ, மந்திரியாகவோ ஆக முடியாது. அரசாங்கம் நம்மீது அடக்குமுறைகளை அதிகமாக ஏவலாம். சந்தேகப்படுவோரை சாகும்வரை சிறையிலே தள்ளலாம்; தூக்கும் இடைக்கலாம், ஆகவே இதனை உள்ளத்தில் பதியவைத்து சேருங்கள்" என தி. மு. கழகப் பொதுச்செயலாளர் குறிப்பிட்டார்.

அன்புள்ள தலைவர்களே! அருமைத்தோழர்களே! தாய்மார்களே! வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் இம்மாநாடு, இரண்டு நாட்களாக இவ்வளவு சிறப்புற நடைபெறுவது கண்டு நான் மிக்க மகிழ்கிறேன். இரண்டு நாட்களாகப் பேசிய தோழர்கள் ஏன் தி. மு. கழகத்தின் கொள்கையினைப் பற்றியும் அதன் கோட்பாடினையும் எடுத்து விளக்கினார்கள். அவர்களுக்கென்ன அக்கறை என்று எண்ணும்போது அவர்கள் தி. மு. கழகத்தினை நாடெங்கும் பரவச் செய்யும் ஓரே நோக்கம் கொண்டவர்களல்ல தி மு கழகத்திலிருந்து நாட்டிற்கு இன்ன செய்ய முடியும், இன்னவை அதன் திட்டம் என்பதை விளக்கியிருக்கிறார்கள் என்பது விளங்கும். ஏறத்தாழ ஐந்நூறு கிளைகள் - ஒரு லட்சம் உறுப்பினர்கள் கொண்டது தி. மு. கழகம் இதுதான் வாய்ப்பு என்று ஏன் இவர்கள் தேர்தலில் ஈடுபடவில்லை, என பலர் எண்ணுகிறார்கள். நாங்கள் ஒன்றும் அவ்வளவு ஏமாந்தவர்களல்ல தேர்தலில் கலந்துகொள்ளாமலிருப்பதற்குக்காரணம், சட்டசபை சென்று சாதிப்பதைவிட, மந்திரியாகி மக்களுக்கு செய்கின்ற நன்மையைவிட சாதாரணமாக இதுபோன்றிருந்து செய்வதே மிகச் சிறந்த பணியென்று கருதுவதால் தான் நாங்கள் தேர்தலில் ஈடுபடாமலிருக்கிறோம்.

தந்திர பீடத்தில் ஆட்சியாளர்

ஒரு மண்டலத்திலே இசை வல்லுனன் ஒருவன் இருந்தான் அவன் யாராலும் அசைக்கமுடியாத ஆற்றல் பெற்றவன் தான் என்று அகம்பாவம் கொண்டிருந்தான். தான் பாடினால், கல்லும் கசிந்துருகும் என்று பேசி, போட்டியிட்டான். ஒருநாள் அரசன் அவன் இசையினை கேழ்க்க பந்தயம் வைக்க காளிகோயிலின் உள்ளே இந்த இசை வல்லுனன் பாடினான். பாடிய உடனே கல்சிலையான காளியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிற்று! உடனே, அரசன் அவனை ஆரத்தழுவி, பூரிப்பு கொண்டு இது அல்லவா 'வித்தை' என்று ஆச்சரியப்பட்டான். காளி கண்களிலே கண்ணீர் எப்படி வந்தது? பக்தன் பாட்டினாலா? அல்ல, பாடகன் பாட ஆரம்பித்ததும், அவன் பழகிவித்த சீடன், சிலைக்குப் பின்னே சென்று, காளி சிலை கண்களுக்கும், தண்ணீர் தொட்டிக்கும் ஓர் பொறியால் தொடர்பு ஏற்படுத்துவான்! இதுதான் கண்ணீர் வந்த 'மாயம்'! ஆகவே அவன் வென்றது பாடால் அல்ல தந்திரத்தால் இப்படி ஏமாந்து அரசன் அவனை புகழ்ந்திருக்க, அதுபோது அந்தப் போட்டியிலே ஈடுபடாத ஓர் இளைஞன் எழுந்து, 'இந்த இசைவல்லுனரால் கல் உருகத்தான் பாட முடியும் ஆனால், நான் மனிதனின் உள்ளமே உருகும்படி பாடுவேன் என்று கூற, பிறகு போட்டியில் கலந்து அவன் பாட அந்த அரசனும், இசை வல்லுநரும் அழுதார்கள் என்று ஒரு பழைய கதை உண்டு போட்டியில் கலக்காமல் இருந்த இளைஞன் நிலையில் தான் நாம் இருக்கிறோம் இசைவல்லுனன் நிலையிலே அரசாங்கமும், ஆளுங்க சியினரும் இருக்கின்றனர்.

யார் ஆண்டாலும் சரி;

ஆனால்......?

காட்டை ஓட்டு வேட்டையாடி, சட்டசபையிலே— யார் வந்தாலும் மந்திரிகளுக்குள்ளே போட்டி போட்டு யார் ஆண்டாலும், நமக்குக் கவலையில்லை. ஆனால், நம்முடைய பகுத்தறிவுக் கொள்கைக்கேற்ப நாடு ஆளப்பட வேண்டும் - ஆளச் செய்யமுடியும், அதற்கு மக்கள் ஆதரவு இருக்கும் என்று கருதுவதால் தான் நாங்கள் தேர்தலில் ஈடுபடவில்லை காங்கிரசை நம்பி இன்னமும் ஏமாளிகளாக இருக்கும் தோழர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன், திராவிட இயக்கமும், அதன் தோழர்களும் அவ்வளவு முட்டாள்களல்ல இவ்வ[illegible]ரிய வளர்ச்சியை-சக்தியை[illegible] படுத்தமாட்டோம். ஒ[illegible] குறிப்பு இ[illegible] பெக்கத்தை [illegible]

(4-ம் [illegible] பார்க்க)

போர்க்கோலம்பூண்டுவிட்டது அமெரிக்கா

——(0)——

உலகப்போர் மூண்டால் சமாளிக்க திட்டம் தயாராகிறது

——(0)——

ட்ருமன் ஆலோசனை

லண்டன், ஜூன் 29—

கொரியாபோர். உலக யுத்தமாக மாறினால் அமெரிக்காவை குறுகிய காலத்தில் யுத்த சன்னத்தமாக்க பிரஸிடெண்ட் ட்ருமன் ஆலோசகர்கள் ஒரு நகல் திட்டம் தயாரித்திருக்கின்றனர்.

அமெரிக்கா ஏற்பட்டுள்ள நிலைமையை ஆபத்தானதென்றே கருதுகிறது என்றும் எதையும் சமாளிக்கத் தயாராக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த நகல் திட்டம் காங்கிரஸுக்கு உடனே அங்கிகரிக்க சமர்ப்பிக்கப்படும்.

இதுவரை இல்லாத அளவு அதிகாரம் இந்த திட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு அளிக்கப்படும். இந்த அதிகாரம் சென்ற யுத்தத்தில் இருந்ததைவிட இன்னும் அதிகமாகவே இருக்கும் எனக் கூறப்படுகிறது. இதன்படி ஆயுதங்கள் உற்பத்தி எல்லாம் சர்க்கார் கான்டிராக்டுகளாக மாறி எல்லா தொழிற்சாலைகளிலும் உற்பத்தி செய்யப்படும். பஸிபிக்கில் அநேக இடங்களில், அமெரிக்கக் கப்பல்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றன. மேற்கு பஸிபிக் தளங்களுக்கு ஜெட் விமானங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

ஜப்பானில், ஜெனரல் மக்ஆர்தரின் தலைமையில் 600 விமானங்கள் தயாராக இருக்கின்றனவென்றும் அலாஸ்காவிலுள்ள ராணுவ படைகள் எந்த அவசர நிலைமையையும் சமாளிக்கத் தயாராக இருக்கின்றனவென்றும் கூறப்படுகிறது.

பெர்லினில் புரட்சி ஏற்படலாம்

பெர்லின், ஜூன் 29—

கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் மேற்கு பெர்லினில் புரட்சி ஏற்படலாம் என்ற பீதி [illegible] இருந்துவருகின்றன. [illegible] சொல்லப்படும் 300000 பேர் கொண்ட ராணுவம் மேற்கு ஜெர்மனி மீது பாயலாம் என்ற வதந்தியும் இருந்து வருகிறது.

மேற்கு ஜெர்மன் பிரதமர் அடினார் பாதுகாப்புக்கான உத்திரவாதம் தருமாறு [illegible] இன்று கேட்டிருக்கிறார்.

புது காங்கிரீட்

சிகாகோ, ஜூன் 29—

[illegible] அமைப்பதில் [illegible] எனும் அமைப்பு அமெரிக்க எஞ்சினியர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. [illegible] பண்ணை வீடுகள் [illegible] உபயோகிக்கப்படும். புதுமுறை காங்கிரீட் இலேசாக இருப்பதுடன், உஷ்ணம் குளிர் [illegible] உதவுகிறதாம்.

—ஏரோ

எங்களுக்கும் வாக்குரிமை வேண்டும்

லெபனான் பெண்கள் கிளர்ச்சி

பீரட் ஜூன் 29—

பெண்களுக்கும் ஓட்டுரிமை வேண்டும் என்று, லெபனான் பெண்கள் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர்.

லெபனானிலுள்ள 57 மாதர் சங்கத்தின் பிரதிநிதிகள் [illegible] சட்டம் [illegible] அனுப்பியிருக்கின்றனர்.

லெபனான் பிரசிடெண்ட், பிரதமர் ஆகியவர்களுக்கும் இவர்கள் [illegible] அனுப்பியிருக்கின்றனர்.

ஐ. நா.-வின் மனித உரிமை சாஸனத்தின் [illegible] திட்டிருக்கிறதென்றும், அதன்படி ஆண்களுக்குள்ள அரசியல் உரிமைகள், பெண்களுக்கும் இருக்கவேண்டும் என்றும் இவர்கள் வற்புறுத்தியிருக்கின்றனர்.

சர்க்காரில் வேலை, தேர்தல்களுக்கு அபேட்சகராக நிற்பது முதலிய உரிமைகளையும் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

—ஏரோ

யூகோவும் போர்க்களமாகுமா?

——(0:)——

பெல்கிரேடுக்கு 50 மைலில் ரஷ்ய துருப்புகள்

——(0)——

கொரியாப்போரின் எதிரொலியென அச்சம்

பெல்கிரேட், ஜூன் 29—

கொரியாவில் யுத்தம் ஏற்பட்டதன் விளைவாக, யூகோவிலிருந்து டிட்டோவை விரட்ட [illegible] எங்கே [illegible] என்ற [illegible] இங்கு ஏற்பட்டிருக்கிறது.

ரஷ்யா, தன் கிழக்கு அரணை பலப்படுத்திக்கொள்ள, டிட்டோமீது பாய்வது சாத்தியமே என்று ராணுவ விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

வட கொரியாவின் ஆக்கிரமிப்பை நிறுத்தியமைக்க, தென் கொரியாவுக்கு ஐ. நா. மெம்பர் நாடுகள் உதவ வேண்டும் என்ற அமெரிக்[illegible] பிரேரணை பாது காப்பு [illegible]சபையில் முன்வந்[illegible] [illegible] யூகோ எதிர்த்து ஓட்டு செய்திருக்கிறது. இதிலிருந்து ரஷ்யா விஷயத்தில் யூகோ[illegible] கொள்கையை மாற்ற [illegible] தயாரிக்கவில்லை என்பது [illegible] காட்டுகிறது.

ரஷ்யா கலந்துகொள்[illegible] ல் காமின்பாரம் [illegible] னிபாகவோ, சேர்[illegible] யூகோவைத் தாக்[illegible] யூகோப்படைகள் [illegible] சமாளிக்க முடி[illegible] ராணுவ நிபு[illegible] பிராயப்படுகின்[illegible]

யூகோ எல்லை[illegible] படைகள் இரு[illegible] இவைகள் பெல்கிரே[illegible] மைல் தூரத்திலேயே [illegible] தாகவும் கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 30-6-50 வெள்ளிக்கிழமை

கொரியா போர்

மூன்றாவது உலகப் பெரும் போர் மூண்டுவிடுமோ என்ற பீதி, மனிதர் மனதில் வளர்ந்து கொண்டேயிருக்கிறது-குறை வதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை.

பீதி மேலும் மேலும் வளர்வதற்குக் காரணம், அமெரிக்கா வேண்டுமென்றே சச்சரவைக் கொண்டு சனத்தில் இறங்கி விட்டதுதான். அமெரிக்கா, தென் கொரியாவுக்குத் தன்னுடைய கடற்படை, விமானப் படைகளை விரைவுபடுத்தி அனுப்பியிருப்பதுமட்டுமல்லாமல், ஐ. நாவின் அங்கம் பெற்றுள்ள நாடுகளெல்லாம், தென் கொரியாவை மீட்கும் வேலையில் ஈடுபட்டுத் தத்தம் ஆயுத உதவிகளை வெல்லாம் தர வேண்டுமென்றும், ஐ. நா பாதுகாப்புச் சபைக் கூட்டத் தீர்மானம் மூலம் கேட்டிருக்கிறது. மேலும் பார்மோஸா, பிலிப்பைன் தீவுகளைச் சுற்றி அதிக அக்கரை யோடு படை பலத்தைக் கொண்டு பாதுகாக்கவும், பிரஞ்சு ஆதிக்கத்தின் கீழிருந்துவரும் இந்தோ-சீனாவுக்கு தன்னுடைய உதவியைப் பெருக்கித்தாலும், அமெரிக்கா முற்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஊன்றிக் கவனிக்கும் போது, மூன்றாவது உலகப் பெரும் போருக்கு வித்திடும் வேலையை அமெரிக்கா தானே வலிந்து ஏற்றுக்கொள்வதாகவே எண்ணத் தோன்றுகிறது. அமெரிக்கக்குடியரசின் தலைவர் தோழர் ட்ரூமனின் கட்டளையை நிறைவேற்றி வைக்கும் பணியில், பசிபிக் கடலைப் பாதுகாத்துவரும் ஜெனரல் மக் ஆர்தர். மிக மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். அமெரிக்காவின் சொல்வேகத்தையும் செயல் வேகத்தையும் பார்த்தால், கொரியா பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மட்டும் எடுத்த நடவடிக்கைகளாகக் கொள்வதற்கில்லாமல், மூன்றாவது உலகப் பெரும் போரை ஆரம்பிப்பதிலிருந்து வரவேற்கும் செய்கைகளாகவே காணப்படுகின்றன.

அமெரிக்காவின் நடவடிக்கைகள், ரஷ்யாவினிடத்தில் [illegible] ப்படி [illegible] த்திரோவிச்சுபோ [illegible] ஐ.நாவும், அச்சமும், [illegible] சியம் அக்லை உலைச்சும் [illegible] த்தாட்டிகளெண்ணம் இரக் [illegible] சந்த கதிப்ப சப் [illegible] மோ என்று எண்ணி, [illegible] பக்கம் எல்லை [illegible] திரும்பிப் [illegible] எண்ணம் [illegible] போர்க்கால [illegible] மீறிவிட்டதல்லா [illegible] சாசனத்தையே [illegible] அக்கிரமமான நட [illegible] இறங்கிவிட்டது [illegible], அமெரிக்காவின் நட [illegible] க்கை அக்கிரமப்பு டி [illegible] என்றும், [illegible] க்கப்பட்டதிலக

யான "பிராவ்தா", கருத்துத் தெரிவித்துள்ளது

அமெரிக்காவின் நடவடிக்கை மிகத் தீவிரமாகி, வடகொரியாவைத் தாக்கும் அளவிலோ அல்லது ரஷ்யாவின் பாதுகாப்பைத் தீண்டும் அளவிலோ சென்றுவிடுமானால், ரஷ்யா—அமெரிக்கா நேரடி மோதுதல் ஏற்பட்டே தீரும் என்பதில் ஐயமில்லை. ரஷ்யா—அமெரிக்கா மோதுதல வெறும் மோதுதலாக இருக்காது மூன்றாவதுஉலகப் பெரும் போராகத்தான் இருக்கும்.

அமெரிக்கா, மற்ற நாடுகளைத், தனக்குப் பக்கபலமாக நிறுத்தி, தென்கொரியாவுக்கு உதவி செய்யும்படி கோரியுள்ளது. அப்படி ஒரு கூட்டு முன்னணி அமையுமேயானால், ரஷ்யாவோடு சீனாவும் ஒரு கூட்டு முன்னணியாக அமைந்து, வடகொரியாவின் பக்கம் நின்றே தீரும் நிலைமை ஏற்பட்டால் விளைவு உலகப் பெரும் போர் தான் என்று சொல்லிக்காட்ட வேண்டிய அவசியமே இல்லை!

இரண்டாவது உலகப் பெரும்போர் ஏற்படுவதற்கு முன் உலக சூழ்நிலை எப்படி இருந்ததோ அப்படிப்பட்ட சூழ்நிலை, இப்பொழுது உருவாகி வருவதையும் உணரலாம். இரண்டாவது உலகப் பெரும் போருக்கு முன், சர்வதேச சங்கத்தின் அங்கம் பெற்றிருந்த நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான போன்ற நாடுகள், சங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்க மறுத்து ஒதுங்கி விலகி நின்று, சுயேச்சையாகச் செயலாற்ற முற்பட்டு, உலகப் பெரும் போருக்குக் காரணமாக நின்றன. சர்வதேச சங்கத்தால் எதும் சாதிக்க முடியவில்லை. அதுபோலவே இப்பொழுது ஐ. நா எதும் சாதிக்க முடியாத நிலையில் வைக்கப்பட்டுவிட்டது. ஐ. நாவின் கட்டளையை, வடகொரியா ஏற்கவில்லை வடகொரியா தென்கொரியாமேல் தொடுத்த போர், தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ரஷ்யாவும், அதனைச் சார்ந்த நாடுகளும் முன்னர் இருந்தே ஐ. நா கூட்டங்களைப் பகிஷ்கரித்து, வெளியேற்றம் செய்தவாறிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் ஐ. நாவின் சம்மதத்தின் பேரில், நடவடிக்கை எடுப்பதாக அமெரிக்கா போர்க்களத்தில் புகுந்துள்ளது. இவைகள் எல்லாவற்றையும் உற்று நோக்கினால், சர்வதேச சங்கத்திற்கு ஏற்பட்ட கதி ஐ. நா. வுக்கும் ஏற்பட்டுவிடுமோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட [illegible] விளைவுகளைத் தன்னை உள்ளா[illegible]க்கொள்ளாமல் பார்த்துக்[illegible]வேண்டிய பெரும் [illegible] இப்பொழுது ஐ. நா. வைப் பெரி

தும் சார்ந்திருக்கிறது.

கொரியா போரில், தம்முடைய பங்கு என்ன என்பது தெரியாமலே, இந்தியா, எகிப்து போன்ற நாடுகள் தத்தளிக்கவேண்டியிருக்கின்றன. இந்தியா எந்த அதிகார வல்லரசு பக்கமும் சார்ந்திடாமல். தனியே நடுநிலையில் நிற்பதுதான் தற்பொழுது சிறந்த செயலாகும். அமெரிக்கா—ரஷ்யா ஆகிய இரு நாட்டுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்தும் பணியில் இறங்கக் கூடுமானால்- இறங்கி வெற்றி பெறச் செய்யக், கூடுமானால் அதுவே சிறந்த நல்ல, காலத்திற்கேற்ற செயலாக இருக்கும்.

மூன்றாவது உலகப் பெரும் போர் ஏற்படாமல் தடுக்க உடனடியாக நடக்க வேண்டிய உருவான செயல் அமெரிக்காவும்—ரஷ்யாவும் நட்புறவு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்வதேயாகும். அந்த நிலை ஏற்பட, அமெரிக்கா சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காரை அங்கீகாரம் செய்யவேண்டுமென்று ரஷ்யா வற்புறுத் மாறும், அமெரிக்கா தயங்கக் கூடாது சியாங் ஆட்சி சீர்குலைந்து. மண்ணோடு மண்ணாக அழிந்து பிறகுகூட, அதனைக் கட்டி முவ முற்படாமல், சீனாவின் சர்க்காராக, யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நிலையில் அமைந்திருக்கும் சீனக் கம்யூனிஸ்ட் சர்க்காரை, அமெரிக்கா ஒப்புக்கொள்ள வேண்டியது நீதியும், நேர்மையும், முறையுமாகும்.

கொரியாவின் உள்நாட்டுப் போர் நிற்கவும் உலகப் பெரும் போர் எழாமல் தடுக்கவும் இருக்கும் ஒரே வழி; அமெரிக்கா—ரஷ்யா நல்லுறவு ஒப்பந்தம் செய்துகொள்வதேயாகும். அந்த நிலையை ஏற்படுத்த ஐ. நா அவையும், ஏனைய நாடுகளும் முற்படுமாக! கொரியப்போர் உலகப்போரப் போராக மாறிவிடக்கூடாது—மாற்றிவிடக்கூடாது என்பதே நமது எண்ணம்! அமெரிக்கா—ரஷ்யா இவற்றிடையே வளர்ந்திருக்கும் மனவேற்றுமை, கொரியாவையும் பலி வாங்கக்கூடாது; உலகையும் பலியாக்கக்கூடாது; அப்படியே அந்து அடங்க வேண்டும்!

தோழர் ரானடே ஜினிவா செல்கிறார்

பம்பாய், ஜூன் 29—

தொழில் ஸ்தாபன வேலை அகிலநாட்டு ஜினிவாவுக்கு அனுப்ப பம்பாய் நகரிலேயே தொழிலாளர் தலைவர் தோழர் வி.பி. ரானடே வை ஐ. எல், ஓ. (சர்வதேச தொழிற் சங்கம்) தேர்ந்தெடுத்திருக்கிறது இவர் வேலை நீக்கிய தேசிய தொழிற் சங்கச் சம்மேளன பிரதிநிதிகளில் [illegible] ஆதரித்தனர்.

ஜினிவாவில் தங்கியிருக்கும் போது [illegible] சம்பளமும் பிரயாண செலவையும் ஐ. எல் ஓ ஸ்தாபனம் ஏற்கும்.

யார்க்ஷயரில் இந்திய மெழுகுவர்த்தி

லீட்ஸ், ஜூன் 29—

இந்திய மெழுகுவர்த்திகள் யார்க்ஷயரில் ஏராளமாக வாங்கப்படுகின்றன: இவை ஒரு டஜன் 19 ஷில்லிங் 6 பென்ஸுக்கு விற்கப்படுகிறது.

[illegible] கட்டும் இனிய [illegible] வையும் மணிகளையும் [illegible] தோழிமார்கள் வாங்கி [illegible] அளிக்க உப [illegible].

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

1-7-50

விருகம்பாக்கம் (கோடம்பாக்கம்) :—என். வி. நடராசன், ஜீவரத்தினம், கு. அப்பாத்துரை.

2-7-50

குன்னூர் (நீலகிரி) :—இரா. நெடுஞ்செழியன்

பெரம்பூர் (சென்னை) :—சி பி. சிற்றரசு, என். வி. நடராசன், [illegible] முருகன், அப்பாத்துரை.

மணத்திடல் :—டி. கே. சீனிவாசன், ஏ. கே. வேலன், தர்மலிங்கம், ஏ. சாவித்திரி.

நாமக்கல் : மு. கருணாநிதி, எஸ் நெடுமாறன்.

எட்டயபுரத்தில் கவிஞர்

எட்டயபுரம், ஜூன் 24

கலைக் கழகத்தின் சார்பில் 18-6-50 அன்று ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களை வரவேற்று, கோவில்பட்டித் தோழர் ஈ. வெ. அ. வள்ளிமுத்து பேசினார்கள் பாரதிதாசனைப் பற்றி தோழர்கள் சலிங்கன், புதுச்சேரி முருகையா, கி முத்துராமகிருஷ்ணன் ஆகியோர் பேசிய பிறகு காஞ்சபுரம் திராவிட முன்னேற்றக் கிளைக் கழகம், மு[illegible] யோர் கல்விச் சங்கம், பாரதிதாசன் மன்றம், நெசவுத் தொழிலாளர் சங்கம், அருப்புக்கோட்டை தி. மு. கழகம் சு. காளிமுத்து ஆகிய எல்லா சங்கத்தின்சார்பிலும், தோழர்களாலும் கவிஞருக்கு மாலை சூட்டி வரவேற்றனர். பிறகு பாரதிதாசன் அவர்கள் பேசியதாவது :—

பாரதி மண்டபம் எம்மதத்தினரும் விரும்பும் முறையில் இருக்குமென்று எண்ணினேன்; அல்லது இக்காட்டை ஆண்ட மூவேந்தர்களின் சின்னமான புலி, வில், மீன் பொறிக்கப்பட்டிருக்குமென்று நினைத்தேன் ஆனல், அப்படி ஒன்றும் இல்லை. பாரதி வளர்த்துவிட்ட புகழின் நிழலிலே நின்று லாபம் அடைய எண்ணித்தான், பாரதியை இப்போது சிலர் தலைமேல் வைத்து கூத்தாடுகின்றனர். பாரதி குடுமி வைக்கவில்லை என்பதற்காக ஒழுக்கங்கெட்டவன் பாரதி என்றனர் அந்நாளில். பூணூல் போடவில்லை என்பதற்காக, கஷ்டப்படுத்தினர்—சபவன், இனத்துரோகி என்றனர். இப்போது யாராவது பாரதியைப்பற்றிப் பேசினால், பாரதிமீது உண்மையான அன்பு உண்டா என்று சேளுங்கள் ஆம் என்றால் பூணூலை அறுத்துவிட்டாரா சாதிப் பேயை நீக்கிவிட்டாரா? என்று கேளுங்கள். பாரதியின் கருத்துக்கள் புதுமையானது. அவரது ஞாபகார்த்த மண்டபத்தில் அவரது [illegible] கொள்கைகளைப் பரப்பிவரும், 'மாலை மணி', 'திராவிடநாடு', 'விடுதலை' இல்லாதது வேதனை தரும் விஷயம். [illegible] சின்ன அண்ணாமலையிடம் [illegible] ட்டும் ரூ 600-க்குப் பு[illegible]ங்கள் வாங்கப் [illegible] ருக்கிற[illegible]. இது [illegible] க்கியத்தனம் [illegible] நேருக்கு [illegible] டய புத்தக[illegible] வாங்குவது தவறு [illegible] ம், இந்தி [illegible] நுழைவுபற்[illegible] தமிழின் [illegible] மணி நேரம்

அரிய நடையில், ஆனல் இனிய தமிழில். கவிஞர் அவர்கள் செவிவிருந்து அளித்தார்கள் பிறகு தோழர் கலிங்கன் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது.

எட்டயபுரம் மகாராஜா அவர்களின் மைத்துனர் ஆர். அமிர்தசுவாமி அவர்களின் அரண்மனையில், கவிஞருக்கு விருந்து அளிக்கப்பட்டது. உடல் நலக்குறைவினால் கஷ்டப்படும் பேராசிரியர் சோமசுந்தரபாரதியார் அவர்களைக் காண பாரதிதாசன் அவர்கள் பேராசிரியர் வீடு சென்றார்.

(ம. தி)

இனி நடப்பவை

சென்னை, பெரம்பூர்:—தி மு. க. சார்பில் பக்ஸ் தோட்டத்தில், 2-7-50 மாலை 5 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அறிஞர் சா. அப்பாத்துரை அவர்கள் தலைமையில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, கா. அன்பழகன், என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

நாமக்கல்:—தி. மு. க. படிப்பகத் திறப்பு விழா 2-7-50ல் நடைபெறும். அதுபோது தோழர்கள் மு. கருணாநிதி, எஸ் நெடுமாறன் முதலியவர்கள் கலந்துகொள்ளுவார்கள்.

* * *

மணத்திடல்:—தி. மு. கழக [illegible] பொதுக்கூட்டம், 2 7-50 மாலை 5 மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஏ கே. வேலன். தர்மலிங்கம், இராமநாதம் தோழியர் ஏ. சாவித்திரி மற்றும் பலர் பேசுவார்கள்.

* * *

மதுரை- தெற்குவாசல், நாடார் வித்தியாசாலை 81-வது ஆண்டு விழா 2-7-50 மாலை 6-15 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும். தோழர் என். பொன்னுசாமி நாடார் தலைமை வகிப்பார்.

* * *

குன்னூர்:—தி. மு. க. பொதுக்கூட்டம் 2-7-50 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு குன்னூர் 'மவுண்ட் பேட்டை'யில் நடைபெறும், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கோவை ஜி. என். ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

விருகம்பாக்கம்:—தி. மு. கழகத்தின், சார்பில் ஒரு பொதுக் கூட்டம் 1-7-50 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு விருகம்பாக்கம் சடைச் தெருவிற்கு அருகாமையில் நடைபெறும். தோழர் வி. தி நாராயணசாமி தலைமை வகிப்பார். தோழர்கள் கு. அப்பாதுரை, என் ஜீவரத்தினம், என். வி. நடராசன். மற்றும் பலர் பேசுவார்கள்.

காங்கிரஸ் யானை பாசீச மதம் பிடித்து அலைகிறது

—(...)—

எங்களுக்கு இலட்சியமே பெரிதன்றி பதவி பெரிதல்ல

—(0)—

ஜனநாயகம் தழைக்க - - மாற்றுக் கட்சி தேவை

ஆரணி மாநாட்டில் அன்பழகன் தலைமை உரை

(நேற்றைய தொடர்ச்சி)

இன்றைய முதலமைச்சர் குமாரசாமிராஜா மிக மிக நல்லவர். யாரையும் எப்பொழுதும் கோபிக்க மாட்டார். பொபரலைவிலே மூன்று மந்திரியாக இருந்து வந்தவர் ஓமந்தூர் செய்த தவறேகூட, இப்படி இல்லாமல் இருக்கத்தான். இவர் மிகவும் நல்லவர். எனவேதான் சோனகொல்லை பொம்மைபோல—முதல் மந்திரியாக இருக்கிறார். பொது மக்களாயிருக்கிறவர்கள் வேண்டுமானால் பொம்மையைக் கண்டு கொலையை நெருங்காதே தவிர, திருடர்கள்—பொம்மையை இலட்சியம் செய்யாததைப்போல காங்கிரஸ்காரர்கள் இடம் கிடைத்தவரையில் தம் காரியத்தை நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஏன் இந்நிலை?

இத்தகைய நிலை ஏன் ஏற்பட்டது? மகாத்மாவின் தொண்டர்கள், பணிபுரிந்த காங்கிரஸ்காரர்கள், ஏன் இன்று தறுதலைகளாக ஆகிறார்கள்? இலட்சியவாதிகள் என்று போற்றப்பட்டோர், ஏன் இன்று சுயநலவாதிகள் என்று காறித் துப்பும் நிலைக்கு ஆளாயினர்? காரணம் காங்கிரஸ் இயக்கம் இப்பொழுது இலட்சியம் எதுவும் இன்றி, திட்டம் எதுவும் இன்றி, ஆட்சிப்பீடத்திலே வீற்றிருந்தால் போதும் என்ற ஆசைக்கு ஆட்பட்டுவிட்டதுதான்.

சுயராஜ்ய போதை!

காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யத்தின் பெயர் சொல்லி, கொண்டாட்டம் நடத்துவதிலே அர்த்தமிருக்கத்தான் செய்கிறது. 'சுயராஜ்யம்' அவர்களுக்கு சுகவாழ்வு தந்திருக்கிறது. பதவியும் பட்டமும் தந்திருக்கிறது. தியாகத்திற்குப் பரிசாக கஞ்சையும், புஞ்சையும் தந்திருக்கிறது. சட்டசபையிலே இடம் தந்திருக்கிறது. சிலரை மந்திரியாக ஆக்கி இருக்கிறது. பணக்காரர்களின் ஆதரவைத் தந்திருக்கிறது. ஜமீன்தார்களின் தொடர்பைத் தந்திருக்கிறது. ஏழைகளை, வறியவர்களை விரட்டித் தந்திருக்கிறது, மாதமானால் அலவன்ஸ், படி, சம்பளம் ஆகியவற்றைத் தந்திருக்கிறது. அதிகாரத்தைக் தந்து ஆதிக்கம் தந்திருக்கிறது. முதலாளிகளின் முகாமிலே புகுந்து கொள்ள இடம் தந்திருக்கிறது. கள்ளமார்க்கெட்டைச் சொந்தமாக்கி இருக்கிறது. பர்மிட் வாங்கி [illegible] பணம் தேட உரிமைத் தந்திருக்கிறது; இவைகளை எல்லாம் வெளியே சொல்வோரை அடக்க, எழுதும் பத்திரிகையைப் பறிமுதல் செய்ய அதிகாரம் தந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ளே குறைகூறுவோரை ஆசைகாட்டி தடுக்கவோ அச்சங்காட்டி அடக்கவோ, வசதி தந்திருக்கிறது. அதற்கு மேலும் சமயம் வாய்க்கும் போது பதவி மோகத்தால் காங்கிரஸ் பஞ்சாயத்துத் தேர்தலிலே நடைபெறுவதுபோல குழப்பமும் கலவரமும் விளைந்தால், யாரோ சிலர் அப்படி நடப்பதுபோலப் பேசி மறைக்க தலைவர்களுக்குச் செல்வாக்கும் தந்திருக்கிறது. இவ்வளவும் தந்துள்ள 'சுயராஜ்ய' அவர்களுக்குப் போதையாகி விட்டபோது, அவர்கள் கொண்டாடாமல் வேறு யார் கொண்டாட முடியும்? எப்படி முடியும்?

சுகவாழ்வு

நேற்றுவரையிலே; தங்களை எதிர்த்து பாரதவரும் இன்று பாடுகின்றனர், படிக்கட்டிலே தவங்கிடக்கின்றனர், ஜிந்தாபாத் என்று பலர் வாழ்த்துகின்றனர், தாங்கள் கதரையாக அணிந்த சதர் சட்டை, சில்க் கதர் சட்டையாக மாறி இருக்கிறது, சட்டைப்பை, பணம் நிரம்பும் வழி கண்டுவிட்டது. எருது பூட்டிய மாட்டு வண்டிகளைப் போய்; இப்பொழுது சொந்தமாக காரே ஆகியுள்ளது. இவ்வளவும் தந்திருக்கிறது. சுயராஜ்யத்திலே குறை என்ன இருக்க முடியும் அவர்களுக்கு?

அவர்களே சொல்லுகிறார்கள்

உண்மையில் காங்கிரஸ்காரர்களைக் குறை கூறுவதற்காகத்தான் இதைச் சொல்லுகிறோம் என்று எண்ண வேண்டாம், காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர்களேகூட, காங்கிரஸ்காரர்களின் போக்கு கெட்டுவிட்டது என்பதை மிக வன்மையாகக் கண்டித்துள்ளனர். இன்றைய பிரதமர் பண்டித நேரு, பிரசிடெண்ட் பிரசாத், ராஷ்டிரபதி பட்டாபி, ஆகியோர் பல மாதங்களாகவே, காங்கிரஸ்காரர்களின் இந்தத் தவறான போக்கை, வெளிப்படையாகவே கண்டித்து வருகின்றனர் என்பதைப் பத்திரிகைகளிலே பலரும் கண்டிருக்கலாம். ஆனால், [illegible] தலைவர்களே பல சமயங்களில் [illegible] தவறி நடக்கிறார்கள். பொது [illegible] கிறார்கள் என்பதை [illegible] நடக்கிறவர்கள், எப்படி [illegible] வார்கள்?

நல்லவராகிவிட்டார்

இன்று, இந்திய துணைக் கண்டத்தின் முடியில்லா மன்னர், ஆசிய ஜோதி; காந்தியார்க்கு என்றெல்லாம் புகழப்படும் பண்டித நேருவே, இங்குள்ள சிக்கல்களையெல்லாம் தீர்ப்பதற்கு முனையாமல், காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளக் கருதியவர்போலும் மந்திரிகளுமல்ல வெளிநாடுகளுக்குப் பயணமாகிறார்.

கப்பலிலே செல்கிறார், விமானத்திலே பறக்கிறார், ட்ரூமனைச் சந்தித்தார், சுகர்ணோவோடு பேசினார், பர்மாவைப் பார்வையிட்டார், பார்லிமெண்டிலே பேசினார், எரிமலையிலே ஏறிப் பார்த்தார், அமெரிக்காவுக்கு யானைக்குட்டிகளை அனுப்பி வைத்தார், குழந்தைகளோடு குஷியாக விளையாடினார் என்று செய்திகள் வந்துகொண்டிருக்கும் அளவுக்கு நல்லவராகி விட்டார். வெளிநாட்டு இராசாவையும் சேர்த்துப் பார்க்கின்ற இந்தக் காரணத்தைக் கொண்டு, சர்வாதிகாரம் செய்யும் பட்டேலும், சனாதனம் பேசும் பிரசாத்தும் இங்கே எதையோ செய்துகொள்ளட்டும் என்று, பணம் செல்வி கொண்டபடி இருக்கிறார். பட்டேல் துரைத்த நல்லவராக நடந்து கொள்ள அதுதான் வழி போலும்.

உண்மையில் காங்கிரஸின் தூணாக, மக்களின் நம்பிக்கைக்குரியவராகவோ, சரியாகவோ [illegible] பாத்திரமான ஐவர், காங்கிரஸ் கட்சிக்கு ஒரு இலட்சியத்தை அமைத்து, காங்கிரசைத் தவறான பாதையில் செல்லாமல் தடுத்திருக்க வேண்டும். இயலாவிடில் தம் செல்வாக்கு புகழ், (ஜனநாயகம்) காங்கிரசின் பாசிசப் போக்கிற்குப் பயன்படாமற் செய்ய விலகிப்போவது இருக்க வேண்டும். இரண்டும் செய்யாமல், விலகவும் மனமின்றி திருத்தவும் திறமின்றி இருப்பது, நாட்டுக்கு இழைக்கும் பெருங் கொடுமையாகும்.

காங்கிரஸ் ஒரு மதயானை

காங்கிரஸ் யானையின் பிடரியிலே, பிரதம பாகனாக உட்கார்ந்து கொண்டுள்ள ஐவர், மக்களுடைய மனதிலே—நல்ல முறையிலே பாகன் யானையைச் செலுத்துகிறான், என்ற எண்ணம் நம்பிக்கைக்குக் காரணமாக உள்ள நிலையில், காங்கிரஸ் யானைக்குப் பாசிச மதம் பிடித்து, சர்வாதிகார திமிர் வளர்ந்து, கண்ட கண்ட பூனிகளிலெல்லாம் புகுந்து கருப்பை அழித்து, பயிரைத் துவைத்து மக்கள் வாழ்வையே வதைத்துக் கொண்டிருக்க, அதை அடக்கும் நினைப்போ, முயற்சியோ இன்றி, யானையைக் குத்தி அடக்கப் பாகனால் இக்கப்படவேண்டிய செல்வாக்கு என்ற அங்குசத்தைக் கொண்டு, பக்கத்திலே பறந்திடும் பறவைகளை விரட்டிடும். பறவைகள் பறக்கும் [illegible] உயரம் தாம் வளர்ந்த [illegible] தாக எண்ணி பரவசம் [illegible] ந்து, மனப்பால் குடித்துக் கொண்டிருக்கும் இந்நிலை; [illegible] கவிக் குரியதுமட்டுமல்ல வேதனைக்குரியதாகும் [illegible] ஆளும் கட்சியும், தனை நடத்தும் நல்லவரும் இப்படித்தான் காட்சியளிப்பர்—நாட்டுக்குமட்டுமல்ல— நல்லறிவோடு சிந்திக்கும் எவருக்கும்.

உத்தமர்காந்தியார்வளர்த்த கட்சி, பண்டிதரை முதல்வராகக்கொண்ட கட்சி, அஹிம்சையின் மகிமையை அகில உலகத்திற்கு உபதேசம்செய்தகட்சி சர்வாதிகாரப் பாசிச ஆட்சி நடத்துவதால்தான், ஜனநாயகத்தை நிலைநாட்ட, தி. மு. கழகம்—இவ்வாறு நாட்டு மக்களுக்குத் தெளிவேற்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. தீங்கானவை என்று தெரியும் எதனையும் எப்பொழுதும், முழு பலத்தோடும், உறுதியோடும் எதிர்க்கின்றோம். எனவே, காங்கிரஸ் எது செய்தாலும், கண்டிப்பவர்கள் இவர்கள் என்று கருத வேண்டாம்,

அடுத்த தேர்தலில்..?

நாங்கள் உறுதியாகச்சொல்லுகிறோம். வருகிற தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை என்றாலுங்கூட, காங்கிரஸ் இப்பொழுது பெற்றுள்ளதைப் போன்ற (Absolute Majority) நிரந்தர பெரும்பான்மையை வெற்றியைப் பெற்றுவிட முடியாது. எதிர்த்து வெற்றி பெறுகிறவர்கள், வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாகவோ, சுயேச்சைகளாகவோ இருப்பார்கள். காங்கிரஸ் எத்தகு முயற்சியிலே இறங்கினாலும், மேலும் மேலும் தோல்வியைத்தான் காணும் என்பது தெரிந்தும், எங்களுக்குள்ள ஆதரவு பல மடங்கு வளர்ந்துள்ளது என்பதோடு வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ள நிலையில், ஏழை வாக்காளர் பலரும் காங்கிரசுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பதை நாங்கள் மனமாரத் தெரிந்திருந்துங்கூட, மக்களை அறிவுள்ளவர்களாக, தன்னுணர்வு பெற்றவர்களாக, தனித்தன்மை கொண்டவர்களாக, புழுவ்டுதலையை [illegible] ரக்கமடையவர்களாகச் செய்ய வேண்டும். மக்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற எங்கள் இலட்சியப் பணியின்காரணமாக, நாங்கள் வருகிற தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்பதை காங்கிரஸ்காரர்கள் உணரக் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் இலட்சியம் பெரிது. பதவியல்ல என்பதையும், நாங்கள் தேர்தல் போட்டிக்கல்ல பிரசாரம் நடத்துவது என்பதை அறிந்தே [illegible]ம், காங்கிரஸ்காரர்கள் [illegible] கருத்தரைகளைக் கே[illegible] சிந்திப்பார்களானால், [illegible] அவர்கள் நாட்டுக்கு செய்யவேண்டிய கடமை கடனுமுண்டாகும். என்றும் இன்றைய அரசியல் சமுதாயம் முதலியவற்றைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ.	அ.	பை
முன்வரவு	3188	14	6
தி. மு. க.—அகரஞ்சேரி கிளை	11	0	0
எ. எம். காளியண்ணன், கஞ்சண்டாபுரம்	5	0	0
எம். சேது, கொழும்பு	2	0	0
ஓ. எல். அப்துல்காதர், சிந்தாதிரிப்பேட்டை	1	0	0
	3207	14	6

சென்னை மாவட்ட தி. மு. க. நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

2—7—50 ஞாயிறு பகல் 2.30 மணிக்கு சென்னை, மண்ணடி 'மாலைமணி' அலுவலகத்தில், மேற்படி கூட்டம் நடைபெறும். பொதுக்கூட்டங்கள் அங்கத்தினர் சேர்த்தல் தலைமைக் காரியாலய கட்டிட நிதி, மாவட்டக் கழகக் கணக்கு ஆகிய விஷயங்கள் ஆலோசனைக்குவரும். கிளை வட்டங்களின் மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும், தவறாது வந்து கலந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்,

கே. கோவிந்தசாமி,
செயலாளர், செ.மா.தி.மு.க.

ரஷ்யாவின் நோக்கம் என்ன?

பதிலை எதிர்பார்க்கிறது அமெரிக்கா

லண்டன், ஜூன் 29—

வட கொரியாவிடம் தன் செல்வாக்கை உபயோகித்து, யுத்தத்தை நிறுத்த ரஷ்யா உதவ வேண்டும் என்று, அமெரிக்கா அனுப்பியுள்ள குறிப்புக்கு ரஷ்யாவிடமிருந்து இதுவரை பதில் வரும் என்று தோன்றவில்லை.

ரஷ்யா கொரியப் போரை ஆரம்பித்திருப்பதின் உண்டான நோக்கங்கள் இருக்கலாம் என்று, இங்கு கருதப்படுவதாக ஒரு ராஜதந்திர நிபுணர் கூறுகிறார்.

1. ரஷ்யா மௌனம் சாதிப்பதன் மூலமும், ஐ. நா. சபையில் சேராமல் ஒதுங்கியிருப்பதன் மூலமும் [illegible] பிரசாரம் செய்கிறது.

2. தேசிய சீனா, ஐ. நா. வில் இருப்பதை ஆட்சேபித்து ரஷ்யாவை ஐ. நா. வை விட்டு வெளியேறி வந்திருக்கிறது. கொரிய போரை ஆரம்பித்ததின் மூலம், செஞ்சீனாவுக்கு ஐ. நா. வில் இடம் கிடைப்பது அவசியமென்பதை ரஷ்யா அறிவுறுத்த வேண்டும்.

3. மேலும் உலக யுத்தம் ஏற்பட்டால், தனக்கு எதிர்ப்பு எவ்வளவு தூரம் இருக்கும் என்பதை அறிய பரீட்சார்த்தமான நடவடிக்கையாகாது.

தந்திப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது

தெற்கு கொரியாவு[illegible] அனுப்பப்படுவதற்கான த[illegible] கள், மறு அறிவிப்புவரை [illegible] றுக்கொள்ள மாட்டா[illegible] வெளிநாட்டுத் தந்தி [illegible] வரத்து ஸ்தாபனம் அ[illegible] கிறது.

விதவை மணம்

மதுரை "நாடார் மகாஜன சங்க" ஆதரவில்
உயர்திரு W. P. A. சௌந்திரபாண்டியன்
அவர்கள் தலைமையில்

மதுரை தோழர்	எனது மகள்
எஸ். அன்பானந்தன்	சக்கரைத்தாய்

வாழ்க்கை ஒப்பந்தம், எனது இல்லத்தில்
2—7—50 ஞாயிறு பகல் 12-மணிக்கு நடைபெறும்

வெ. பு. குருசாமி நாடார், சிருக்தங்கல்.

எண்ணித் துணிந்து ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காருக்குக் கொஞ்சம் துணிவு இருக்குமானால் நாட்டிலே நல்லாட்சி நடைபெற பயன்படுத்தலாம். அதைவிடுத்து அச்சம் குடிகொண்டு, நம்மை அழிகக எண்ணினால் நிச்சயம் அவர்கள் எதிர்ப்பைத் தேடிக்கொண்டவர்களாவார்கள். சர்க்காருக்கு இத்தமாநாட்டை மட்டுமல்ல, பொதுவாக நாட்டின் நிலைமையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாட்டு நிலை

நான் சுற்றுப் பிரயாணம் சென்றிருந்த தமிழ் நாடு முழுவதிலுமே தொழிலாளர் முதல் மிராசுதாரர் வரை இவர்களைப்பற்றி உள்ள அதிருப்தியைக் கண்ணுற்றேன். அறுவடை செய்யும் போது போலீஸ் காவல்-ஆலைகளைச் சுற்றி போலீஸ் பந்தோபஸ்து இருந்தால்தான், ஆலை நடைபெறும் என்ற நிலை இவர்கள் ஆட்சியிலே வட்டிக்கடைக்காரனை எடுத்துக்கொள்ளுங்களேன். அவன்தான் என்ன நிம்மதியாக இருக்கிறான். மதுரையிலே பட்டப்பகலிலே நான் பார்த்தேன் சாதாரண போலீஸ் அல்ல, எஸ். ஏ. பி. ஊரைச் சுற்றி காவல் இருந்தார்கள். நான் என்ன இவ்வூரிலே கொலை - கொள்ளை-யேதாவது நடக்கிறதா ? என்றேன். இல்லை. இல்லை வறுமை வலுத்துப்போய், புரட்சி அதிகரித்திருக்கிறது. ஆகவே, திடீர் கொலை—களவு நடைபெறும் என எதிர்பார்த்து தான் காவல் வைத்திருக்கிறார்கள் என்று தோழர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நிலைமையிலே வர்கள்காடாளவேண்டியிருக்கிறது.

ஆர்ப்பாட்டம் செல்லாது

நான் போலீஸ் இல்லாமலேயே ஆட்சி நடைபெற வேண்டும் என்று கூறுபவனல்ல தி. மு. கழகம், ஜஸ்டிஸ் கட்சியினின்று தோன்றியது. அமைதிக்காக, போலீஸ் அவசியம் என்று வாதிட்ட, ஜஸ்டிஸ்கட்சி வழிவந்தவர்கள் நாம். ஆனால், காங்கிரஸ் தோழர்கள் எங்களாட்சியிலே போலீசே இருக்காது என்றனர். நெஞ்சியிலே கைவைத்து நேர்மையில் எண்ணம்வைத்து உங்களாலே போலீஸ் இல்லாமலே ஆட்சி செய்ய முடியும் என்று கூற முடியுமா? போலீஸ்—அதிலே சாதாரண போலீஸ், எம். எஸ். பி, எஸ். பி. என்ற மூன்று பிரிவு போலீஸ் அல்லவா வேண்டியிருக்கிறது? சட்ட திட்டங்களை அலசிப்பார். ஆர்ப்பாட்டக்காரர்கள், ஆணவக்காரர் என்றும் அதிக நாள் ஆட்டம் இல்லை. மற்றுக் கட்சிகள் இல்லையானால், ஆளுங் கட்சியினர் தம் தவறை, மக்கள் அறிய முடியாது. சட்ட

மெனும் சட்டியிலே. அடக்குமுறை எனும் தண்ணீரை ஊற்றினால், அதனால் மக்கள் புரட்சியெனும் நெருப்பணைவது.

பார்ப்பன ஒற்றர் வேண்டாம்

ஆகவே, நாடாளும் நண்பனே! நாட்டின் கொடுமையினை நாங்கள் கூறும்போது, எங்களை உன் தோழன் என்று கொள். நாட்டிலே உள்ள கொடுமையினையும் மடமையினையும், அடிமை வாழ்வினையும் காணும்போது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இப்படி மாநாடு மூலம் நாங்கள் நாட்டின் நிலைமையினை மக்களுக்குத் தெரிவிக்கிறோம். உன் உள்ளத்திலேயும் அது பதிய வேண்டும் என்ற காரணத்தால் இதோ இங்கு அரசாங்க ஒற்றர்கள் வந்துள்ளார்கள். அரசாங்கம் அவர்களை நாட்டின் நிலை அறியத்தான் அனுப்பிற்றென்றால் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால், அவர்கள் அதற்கனுப்பியதாக நான் எண்ணவில்லை. அண்ணாத்துரை ஏதாவது புதியதாகப் பேசப்போகிறானா, உள்ளே தள்ள புதிய செக்ஷனுக்கு வழி பாருங்கள் என்று அனுப்பியதாகவே, நான் நினைக்கிறேன். நான் அரசாங்கத்தைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து பார்ப்பன ஒற்றர்களை மட்டும் எங்கள் கூட்டத்திற்கு அனுப்பவேண்டாம் என்று. பிராமணர்கள்மீது நமக்குள்ள கோபத்தாலோ—அல்லது அவர்தம் கொள்கைமீது நமக்குள்ள வெறுப்பினாலோ அல்ல. ஏனென்றால், இன்று வழக்குக்கு வந்துள்ள வழக்குகள் பெரும்பாலும் பிராமண ஒற்றர்களால் கொண்டுவரப் பட்டதுதான்.

எண்ணித் துணியுங்கள்

இன்று பேசிய தோழர்கள் நீங்கள் தி. மு. கழகத்தில் சேருங்கள் பலரையும் சேர்க்கப் பாடுபடுங்கள் என்று கூறினார்கள். நீங்கள் சேருவதற்கு முன்னே நன்றாகச் சிந்தித்து சிறந்ததோர் முடிவிற்குப் பின்னே சேரவேண்டும். ஏனென்றால், இந்த இயக்கத்தின் மூலம் சட்டசபை உறுப்பினராகவோ மந்திரியாகவோ ஆக முடியாது. அரசாங்கம் நம் மீது அடக்குமுறைகளை அதிகமாக ஏவலாம். சந்தேகப்படுபவனை சிறையிலே சாகும்வரை தள்ளலாம். தூக்கும் கிடைக்கலாம். ஆகவே, இதனை உள்ளத்தே ஆழப் பதியவைத்து சேருங்கள். என்மீது தொடரப்பட்ட 'ஆரியமாயை' வழக்கு ஆறு, ஏழு மாதமாக நடைபெறுகிறது. இன்னமும் வழக்கு முடிந்தபாடில்லை! இது மாத்திரமல்ல விசித்திரம் ... தோழர் ஒருவர் மீது வ... தொடர்ந்து ஒரு

வருடமாகியும், இன்னும் சம்மன் சார்வு செய்யப்படவில்லை; தேடுகிறார்கள்? காரணம் அந்நண்பர் இறந்து மாதம்பதினொன்றாகிறது! இப்படியிருக்கிறது நம்முடைய அரசாங்கம் ஆகவே நம் பணியிலே ஈடுபடுவோர் பல தொல்லைகளை ஏற்றாகவேண்டும். 'இலட்சிய வரலாறு' வழக்குக்குநான்சென்றிருந்தேன். 'நீதிநிலாகா வேலை' செய்யவில்லை, ஆகவே வழக்கு ஒத்திவைப்பு எவ்வளவு தொல்லை? சீர்காழியிலே எனக்கு 144 ஆகவே அதை அதேத்தாவது ஓர் கிராமத்திலே கூட்டம் போடலாம் என எண்ணி, உத்தரவை வாங்கினேன். அதிலே. Shiyali Town and Taluk என்று கூலாக முழுவதிலுமே 144 மதுரையிலே பெரியார் அவர்களுக்கு 144 தடைவிதித்தார்கள். அதற்கு அவர்கள் காட்டிய காரணம் திராவிடர் கழகத்துக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பகை இருக்கின்ற காரணத்தால், சோழவந்தானில் திராவிட முன்னேற்ற கழகமாநாடுநடைபெறுகிறது; ஆகவே, குழப்பம் ஏற்படும் என்ற காரணம் காட்டி தடைவிதித்தார்கள். மதுரை தி. க. தோழர்களெல்லாம், தி. மு. க. மாநாட்டில் வந்து பங்கு கொண்டார்கள் இது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனாலும், கூட்டம் நடைபெறக் கூடாது என்ற ஒரே காரணத்தால்தான், பெரியாருக்கு 144

கண்டிக்க ஒரு கட்சி தேவை

எதற்காக இவைகளை யெல்லாம் கூறுகிறேன் என்றால், நாளுக்கு நாள் நமக்கு அடக்குமுறை ... அதிகமாகும். மோட்டாருக்கு 'பிரேக்' போல, ஆளுங்கட்சியினைத் திருத்த ஒரு எதிர்க்கட்சி தேவை. காங்கிரஸை ஏன்?' என்றபொழுது என்ன காரணம் காட்டப்பட்டதோ வெள்ளையன் கொள்ளையடிக்காமல் பாதுகாக்கவும், தவறுகளைத் திருத்தவும்தான் காங்கிரஸ் என்று கூறப்பட்டதோ, அதே காரணத்தைத்தான் நாம், நம் கழகம் இருக்கவேண்டியவைக்குக் காட்டுகிறோம் வெள்ளையன் வெளிநாட்டான் ஆகவே அவனைத் திருத்த ஒரு கட்சி தேவை, ஆனால் காங்கிரஸ் ஆள்பவர் நாம், அதற்கு ஒரு கட்சி தேவையில்லை என்று கூற முடியாது. நம்முடைய மாடானாலும், மாடானால், முட்டத்தானே செய்யும்? காவியுடை உடுத்திருப்பதால், அவர் கள்ளச் சிந்தையனல்ல என்று எப்படி எண்ணிவிட முடியும்? ஆகவே காங்கிரஸ்காரனானாலும் காவி உடையானானாலும், கதர் உடையானாலும், கண்டிக்க ஒரு கட்சி தேவை.

ஓர் எடுத்துக்காட்டு

கண்டிப்பதென்றால், கண் மூடித்தனமாகக் கண்டிப்பதல்ல. உதாரணம் ஒன்று சொல்லுகிறேன். காங்கிரஸ் தோழர்கள் கொண்டுவந்த மது விலக்குத் திட்டத்தை நாங்கள் மேடைகளிலே ஆதரித்துப் பேசினோம். மாநாடுகள் மூலம் தீர்மானங்கள் கொண்டு வந்து பாராட்டினோம் ... நானும் என் நண்பர் ... சுவை அரசர் என். எஸ். ... வும் சேர்ந்து 'நல்ல ...' என்ற மதுவிலக்கு பிரசார படம் எடுத்தோம்.

வேண்டுமானால், இவர்கள் பிரசாரம் மண்ணுலகோடு மட்டும் நின்றிருக்கது. நாங்கள் 'விண்ணுலகிலும்' மது ... கூடாதென்றோம்.

வேண்டாம் அடக்கு முறை!

இப்படி நன்மையினை நாவாரப் புகழ்ந்து, நடக்கும் ஒரு கட்சியிடம் நீ கண்ணியத்தோடு நடக்கவில்லை என்றால், 'இவர்கள் ஆட்சியைக் கைப்பற்ற அடிகோலுகிறார்கள் என்றால் என்ன பொருள்? சப்படித்தான் நாங்கள் ஏன்ன ஆகக்கூடாதா? ஆளத் தெரியாதா? ஆளமுடியாதா? இந்த நாட்டை தோழர் பண்டித நேருவுக்கும், தோழர் குமாரசாமி ராஜாவுக்குமா, பட்டயம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது இவர்கள்தான் ஆளவேண்டுமென்று. எத்தனையோ ஆட்சிபீடங்கள் ஆண்டன. எண்ணிலடங்கா அரசுகள் அழிந்தன. இதுதானே சரித்திரம்? ஆகவே, காங்கிரஸ் தோழர்களுக்கு நான் கூற விரும்பப்படுகிறேன், உங்கள் தலைவர்களைத் திருத்துங்கள் அறிவுப்பணியினையே குறிக்கோளாகக்கொண்டிருக்கும் தி. மு. கழகத்தின் மீது, அநியாயமாக விசும் அடக்குமுறைகளை நிறுத்தச் சொல்லுங்கள். எங்கள் நோக்கமெல்லாம் அரசியல் பொருளியல், சமுதாயம் ஆகியவற்றில் சமத்துவமும், ஜனநாயகமும் காணவேண்டுமென்பதல்லாமல் வேறல்ல. இதன் அடிப்படைதான் நாங்கள் "திராவிடநாடு திராவிடருக்கே" என்பது. அதன் எதிரொலியே இம்மாநாடு என்று கூறி முடி...ார்.

நண்பர்களுக்கோர் நாடக விருந்து

'திராவிடன்' அச்சக உதவி நிதி நாடகம்

9-7-50 ஞாயிறு மாலை 6-மணிக்கு
சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

தோழர் சி. என். அண்ணாத்துரை,
நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி
டி. எம். மருதப்பா, டி. வி. நாராயணசாமி, ராஜேந்திரன்
மகாலிங்கம், முத்து ஈழத்து அடிகள், கிருஷ்ணமூர்த்தி
சி. ராஜகோபால், சம்பந்தம், தில்லை-வில்லாளன்
ஆகியோர் நடிக்கும்

சந்திரமோகன்

கட்டணம்:—ரூ. 5, 3, 2, 1. (வரி உட்பட)

குறிப்பு:—உதவி நிதி நாடகமாதலால், எவரையும் இலவசமாக அனுமதிக்கப்படமாட்டாது.

அன்பழைப்பாளருக்கு மட்டும் தனி இடம் உண்டு.
தோழர்களும், தாய்மார்களும் பெருவாரியாக வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்

சென்னையில்கீழ்க்கண்ட இடங்களில் டிக்கட்டுகள் 29-6-50 முதல் விற்கப்படும்

கே. எம். கண்ணபிரான், 'கலவாய் வீடு' சோலையப்பன்தெரு, வண்ணை.
சி. வி. ராசன், 'செலக்ட் பின்மென்' செலக்ட் டாக்கீஸ் அருகில் செங்காம் பஜார்.
'மாலைமணி' அலுவலகம், மண்ணடி.
'திராவிடன்' அலுவலகம் 18, பெருமாள் முதலி தெரு, சென்னை-1.
கே. திருவேங்கடம் பிஸ்கட் பாக்டரி, 200 ராசப்பசெட்டித் தெரு, பார்க்-டவுன்.
தோழியர் அலமேலு அப்பாதுரை, 10, அருணாசல ஆச்சாரி தெரு. (பாரகன் டாக்கீஸ் அடுத்த தெரு) சேப்பாக்கம்.
ஏ. கே. சாமி, 71, ஸ்டிராஹன்ஸ் ரோடு, ஓட்டேரி.
எஸ். பாலசுந்தரம், மாணும்பது ஸ்டோர்ஸ், வில்லேஜ் ரோட், நுங்கம்பாக்கம்.

நாடகத்தன்று மட்டும் தியேட்டரில் விற்கப்படும்
சத்தியவாணிமுத்து, காஞ்சி மணிமொழியார் அமைப்பாளர்கள்.

அறிவிப்பு

ரெஜின மூட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரையைத் தருகிறது.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

புதிய நூல்கள்

அவன் (வில்லாளன்)	0-8-0
வத்திப்பூக்கள் ,,	0-12-0
பிருந்தாவனத்தில் (செழியன் M. A.)	0-12-0
இதய அலை (வாணன்)	0-8-0
நடன சிங்காரி (ருஷ்யக் கதை)	0-6-0
கண் வலை	0-6-0
நாடறிந்த நட்சத்திரங்கள் (சேரன்)	0-8-0
நடிகை நந்தினி ,,	0-4-0
நட்சத்திரங்களுக்கு பகிரங்கக் கடிதம் ,,	0-3-0
சினிமா ஒழிக ,,	0-4-0
கலைக் கோயிலா விபசார விடுதியா? ,,	0-4-0
பரந்தாமனுக்கு பகிரங்கக்கடிதம்	0-3-0
பரமசிவனுக்கு பகிரங்கக் கடிதம்	0-3-0
யார் அழிவுக்காரி ?	0-3-0
இரத்த வெள்ளம்	0-10-0
அறிவுக் கதிர்கள்	0-3-0

அண்ணாத்துரை

கல்வியும் அரசாங்கமும்	0-2-0
தேவ லீலைகள்	0-8-0
அண்ணாவின் உவமைகள்	0-8-0
தோழமையா? விரோதமா?	0-4-0

மு. கருணாநிதி

தூக்குமேடை	1-4-0
வாழமுடியாதவர்கள்	0-12-0
பெரிய இடத்துப் பெண்	0-8-0
சங்கிலிச் சாமி	0-8-0
பலிபீடம் நோக்கி	0-6-0
கயிற்றில் தொங்கிய கணபதி	0-3-0
கொலைகாரி (ஆசைத்தம்பி)	0-12-0
களஞ்சியம் (நெடுஞ்செழியன் M. A.)	0-8-0

வியாபாரிகட்கு 25 சதவிகிதம்கழிவு
தனிப் பிரதிக்கு புத்த விலைக்கு தபால் தலைகள் அனுப்பவும்.

முன்னேற்றப் பண்ணை,
118. பிராட்வே :: சென்னை-1.

Printed & Published by T. M. Parthasarathy at the Mer... Press, 2/45, Muthumari Chetti St., Madras-1.